

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.12.2025) கோயம்புத்தூரில், பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட பாசன விவசாயிகள் சங்க நிருவாக திட்டக் குழுத் தலைவர் பரமசிவம், திட்டக்குழு உறுப்பினர்கள் ப.அருண், சி.நித்தியானந்தன், கே.நல்லதம்பி, கோ.குருசாமி, ப.ஈஸ்வரன், மு.தெய்வசிகாமணி, மு.ஈஸ்வரமூர்த்தி, ர.பாலசுப்பிரமணி, ஜெயப்பிரகாஷ் ஆகியோர் சந்தித்து, பரம்பிக்குளம் ஆழியாறு பாசன வாய்க்காலை தூர்வாரிட 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஈஸ்வரசாமி, கணபதி ப. ராஜ்குமார், சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.12.2025) கோயம்புத்தூரில், தொழில் அதிபரும், கல்வியாளருமான பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்கள் சந்தித்து, கோவை மாநகரின் ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு ஒப்பணக்கார வீதி வரை உள்ள உயர்மட்ட மேம்பாலத்திற்கு 'சி. சுப்பிரமணியம் மேம்பாலம்' என்று பெயர் சூட்டியமைக்காக நன்றி தெரிவித்தார். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி மற்றும் கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்களின் மகன் சங்கர் வானவராயர், மருமகன் ராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.

### கலவரக்காரர்களையும், காவல்துறையினரையும் கட்டுப்படுத்தாமல்

# கிறிஸ்துவ பிரார்த்தனையில் பிரதமர் மோடி பங்கேற்றதில் அர்த்தமில்லை!

## 'தி இந்து' நாளேடு தலையங்கம்!

**சென்னை, டிச.30- கலவரக்காரர்களையும், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் காவல்துறையினரையும் கட்டுப்படுத்தாமல், கிறிஸ்துமஸ் பிரார்த்தனையில் பிரதமர் மோடி பங்கேற்றதில் எந்த அர்த்தமும் இல்லை என 'தி இந்து' நாளிதழ் தலையங்கம் விமர்சித்துள்ளது.**

The Lost message எனும் தலைப்பில், சிறுபான்மையினருக்கான அரசின் பாதுகாப்பு உறுதிமொழிகள் வெறும் அடையாளத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும் என வலியுறுத்தி தி இந்து ஆங்கில நாளிதழ் தலையங்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

தலைநகர் புதுடெல்லியில் உள்ள தேவாலயத்தில் டிசம்பர் 25 அன்று நடைபெற்ற கிறிஸ்துமஸ் பிரார்த்தனையில் பிரதமர் மோடி கலந்துகொண்டது உலக அளவில் கவனம் பெற்றதாகவும், பிரதமர் மோடி இதற்கு முன் விழாக்களின் போது கிறிஸ்தவத் தலைவர்களை சந்தித்தும் விருந்தளித்துள்ளார் என்றாலும், ஒரு தேவாலயத்தில் நடைபெற்ற பிரார்த்தனையில் பங்கேற்றது இதுவே முதல் முறை என்றும், பிரதமர் மோடி தனது சமூகவலைத்தளத்தில் இயேசு கிறிஸ்துவின் போதனைகளை மேற்கோள் காட்டி, அமைதி, கருணை மற்றும் நல்லிணக்கத்திற்கான வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டதையும் இத்தலையங்கம் சுட்டிக்காட்டி உள்ளது.

கிறிஸ்துமஸ் காலத்திலும் அதற்கு முன்பும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் குறித்த செய்திகள் வெளியான நிலையில், பன்முகத்தன்மை கொண்ட இந்திய சமூகச் சூழலில் சிறுபான்மை மக்களுக்கு நம்பிக்கையூட்டும் செயலாக பிரதமர் மோடியின் தேவாலய வருகை அமைந்ததாகவும் மாநில ஆளுநர்கள் சிறுபான்மை மக்களின் விழாக்களில் பங்கேற்பது போன்ற நடவடிக்கைகள், அன்றாட அரசியலின் ஒரு பகுதியாகவும் பன்முகப் பண்பாட்டுக் கலவையின் உண்மையான பிரதிபலிப்பாகவும் இருந்து வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமர் மோடியின் சித்தாந்தத் தொட்டிலாக கருதப்படும் ஆர்.எஸ்.எஸ்., கிறிஸ்தவத்தையும் இஸ்லாத்தையும் நீண்ட காலமாக இந்தியாவிற்கு அந்நியமானவையாகக் கருதி வருதாகவும், இருப்பினும், அண்மைக்காலமாக இந்த கண்ணோட்டத்தை ஆர்.எஸ்.எஸ். மாற்றி வருவதன் அடையாளமாகவே கிறிஸ்துமஸ் வழிபாட்டில் பிரதமர் மோடி பங்கேற்றதாக கருதலாம் என்றும் தெரிவித்துள்ளது தி இந்து,

ஆனால், உண்மையில் இந்தக் கருத்துடன் பிரதமர் மோடி உடன்படுவதாக இருந்தால், அதனை வலிமையாகவும் தெளிவாகவும் அவர் வெளிப்படுத்த வேண்டும், அப்போதுதான் அவரது கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள மாநில அரசுகளின் காவல்துறைகள் இதனை உணர்ந்து செயல்படும் என்றும் அது வலியுறுத்தி உள்ளது.

கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் கொண்டாட்டங்களுக்கு எதிரான நாசவேலைகளும் வன்முறைகளும் அன்றாட நிகழ்வாக உள்ளதாகவும், அசாம், கேரளா, உத்தரப் பிரதேசம், சத்தீஸ்கர், டெல்லி, ஒடிசா உள்ளிட்ட மாநிலங்களில் பாதிரியார்கள் தாக்கப்படும் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள தி இந்து தலையங்கம், தனிநபர் சுதந்திரம் மற்றும் மதச் சுதந்திரம் அரசியலமைப்பால் பாதுகாக்கப்படுவதாகவும், மதமாற்றம் குறித்த போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து நடத்தப்படும் வன்முறையை நியாயப்படுத்த முடியாது என்றும் தெளிவுபடுத்தி உள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிறிஸ்துமஸ் தொடர்பான வணிக நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதை அது சுட்டிக்காட்டி உள்ளது இந்தச் சம்பவங்களில் சங்பரிவாருடன் தொடர்புடைய குழுக்கள் ஈடுபட்டுள்ளதாகவும், பிரதமர் மோடியின் கிறிஸ்துமஸ் செய்திக்குப் பிறகும், இந்த வன்முறையில் ஈடுபட்ட கும்பல்களுக்கு எதிராக எந்த அர்த்தமுள்ள காவல்துறை நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் விமர்சித்துள்ளது 'தி இந்து'

இதற்கு மாறாக, பாஜக தலைவர்கள் உட்பட பலரால் கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான மிரட்டல்களும் வன்முறை அச்சுறுத்தல்களும் தொடர்வதாகவும் குற்றம்சாட்டி உள்ளது. சங்பரிவாரின் வன்முறைகள் பிரதமர் மோடியின் கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செயதியை பிரதிபலிப்பதாக இல்லை என்றும், கலவரக்காரர்களும், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் காவல்துறையினரும் பிரதமரின் செய்தியை புரிந்து கொண்டதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை என்றும் விமர்சித்துள்ள தி இந்து தலையங்கம், இந்தியாவில் பன்மைத்துவத்திற்கு ஆதரவாக மேலோட்டமான அடையாளச் செயல்களைத் தவிர வேறு எதையும் செய்ய பாஜக விரும்பவில்லை என்பதே இதன் பொருள் என்றும் குற்றம்சாட்டி உள்ளது.

## அமாவாசை



இன்னும் 3 அமாவாசைகள்
தான் இருக்கின்றன -
எடப்பாடி

அமாவாசைக்கு
எப்ப பார்த்தாலும் அமாவாசை
ஞாபகம் தான் போ...



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்



தேனி வடக்கு மாவட்டம் மருத்துவர் அணி மாவட்ட அமைப்பாளர் டாக்டர் பாண்டியராஜன் ஏற்பாட்டில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கத் தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் அறுசுவை உணவு, நலத் திட்டங்கள் வழங்கினார்.

### நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாடு!

# துணை முதல்வர் பிறந்த நாள் விழா 680 ஆட்டோ ஓட்டுனர்களுக்கு சீருடை!

## மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

நெல்லை, டிச. 30 –

நெல்லை மேற்கு மாநகர தி.மு.க. சார்பில் துணை முதல்வர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் 680 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ.பங்கேற்று சீருடைகளை வழங்கி,திராவிட மாடல்

அரசின் சாதனைகள் விளக்க துண்டு பிரசுரமும் வழங்கினார்.

நெல்லை மேற்கு மாநகர தி.மு.க சார்பில் துணை முதல்வர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை சாப்டர் பள்ளியில் மேற்கு மாநகர தி.மு.க.சார்பில் 680 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வு மற்றும் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை துண்டு பிரசுரமாக வழங்கும் நிகழ்வு மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வு மாநில இளைஞரணி துணை செயலாளர் இன்பா ஏ.என்.ரகு,நெல்லை தொகுதி பார்வையாளர் முத்துச்செல்வி, நெல்லை பேட்டை கிழக்கு பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம்,

மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாவட்ட துணை செயலாளர் கிரிஜா குமார்,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை,மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முன்னாள் மேயர் பி.எம்.சரவணன், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அலிஃப் மீரான், வழக்கறிஞர் இனியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.பங்கேற்று 680 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடைகளை வழங்கி,கழக அரசின் சாதனை விளக்க துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்து துவக்கி வைத்தார்.


நிகழ்வில் மூத்த முன்னோடி எஸ்.டி.நாதன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் மைக்கேல் ராஜேஷ், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சௌபர் சாதிக், துணை அமைப்பாளர்கள் மணிகண்டன், சங்கர், கோமதி நாயகம், அய்யம் பெருமாள், குமார், மானூர் தெற்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் கார்த்திக், மாமன்ற உறுப்பினர் உலகநாதன், வட்ட செயலாளர்கள் மாரிமுத்து, லெனின்,சிந்து முருகன், ஆனந்த பெருமாள், தலைமை கழக பேச்சாளர்கள் நெல்லை முத்தையா, சு.த.மூர்த்தி, சி.பா.ராவணன், மில் ஜே.குமார், தி.மு.க. நிர்வாகிகள் ஷெட்டி, சிவா, சார்லஸ், எஸ்.எஸ்.முத்து, தளபதி ஆறுமுகம், மகாராஜன், செந்தில்குமார், பெப்சி சரவணன், சிவகுமார், கணேச பெருமாள், ராமச் சந்திரன், முத்து சுப்பிரமணியன், விஜய கீர்த்தி, தொப்பி மைதீன், கிருஷ்ண குமார், கண்ணன்,பொன் ஆறுமுகம், ராஜ்குமார், ஐயப்பன் , மாரி முத்து, அந்தோணிராஜ், செல்வ பெருமாள், முத்துக்குமார், வேலாயுதம், பிந்து செய்யது,ரேவதி அசோக், ஆனி ரேக்லண்ட், கார்த்திக்,சேர்மன்துரை, செல்வா,பாபநாசம்,ஜெய்கணேஷ், முறுக்கு கடை கணேசன்,சங்கர் கணேஷ்,அக்பர் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் செய்திருந்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி.எம்.ஆர். சபாபதி

**டிசம்பர் 30 (2009)**



சென்னை, ஆயிரம்விளக்கு பகுதிக் கழக துணைச் செயலாளர், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை துணைத் தலைவர், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத் தலைவராக தொடர்ந்து 35 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

தொழிலாளர்களுக்கு பல உரிமைகளை பெற்றுத் தந்து, போக்குவரத்துத் தொழிலாளர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

நெருக்கடிநிலை காலத்தில் கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு உறுதுணையாக தமிழகம் முழுவதும் அவரோடு சுற்றுப்பயணம் மேற்கொண்டு கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

'தன்மான முரசமாக, தகுதிமிக்க தொழிலாளர் சங்கமாக முழங்கிய என்தோழன், முன்னணிக் கழகத் தொண்டன், முடிவெய்திய செய்தி கேட்டு முடிவில்லா சோகத்தில் ஆழ்ந்ததே பாட்டாளி வர்க்கம்! தொழிலாளர் துணைவன் மறைந்தாரே!" என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



விருதுநகரில் முத்துராமன்பட்டியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பாக முகவர் கூட்டத்தில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சிறப்புரை ஆற்றினார். இந்த கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், தொகுதி பார்வையாளர் மதுரை எஸ்.பாலா, நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், நகர் மன்ற தலைவர் எஸ்.ஆர்.எஸ்.ஆர்.மாதவன், மாவட்ட துணை செயலாளர் ஏ.ஆர்.சுபேதா, விளையாட்டு மேம்பாட்டு அணி கே.ஜி.ராஜகுரு, பொதுக்குழு உறுப்பினர் ஆர்.பி.மதியழகன், இளைஞர் அணி ஆர்.கிருஷ்ணகுமார், பொறியாளர் அணி மதன்குமார், வழக்கறிஞர் அணி அசோக், அமைப்புசாரா ஓட்டுனர் அணி எல்.திருமாறன், நகர அவைத் தலைவர் ஸ்ரீராம் காசிராஜன், நகர துணை செயலாளர் ஏ.எஸ்.கே.ரமேஷ் குமார், மாவட்ட மகளிர் அணி வகிதா ரகுமான் , 18 வது வார்டு மாதவி, ரமேஷ், ஒன்றிய அவைத் தலைவர் புலி நாயக்கர் மற்றும் பாக முகவர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



திருச்செந்தூர் ஒன்றியத்தில் இருக்கன்குடி மாரியம்மன் கோவிலுக்கு பாதயாத்திரையாக சென்றபோது விபத்தில் இறந்த குடும்பத்தினருக்கு தமிழக அரசின் நிதி உதவி ரூபாய் 3 லட்சத்திற்கான காசோலையினை தமிழக மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் வழங்கினார் உடன் ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், நகரச் செயலாளர் வாள் சுடலை, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர், வழக்கறிஞர் அணி கிருபாகரன், வி.பி. செல்வகுமார், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.